**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : SC.No.506/2024**

**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தவசிப்பாண்டி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முத்துக்கருப்பத்தேவர் | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | மேலசிவகாமியாபுரம் | வயது | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 23rd, 2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் மேலசிவகாமியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து **என்னுடையதல்ல**. இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 09.07.2023ம் தேதி, 15.45 மணிக்கு போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில் நானும், அழகுதுரை என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.25 15:37:24 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.506/2024**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராம்பிரசாந்த் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மாரியப்பன் | தொழில் | : | எலக்ட்ரிசியன் |
| கிராமம் | : | கொக்குகுளம் | வயது | : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 23rd, 2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கொக்குகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரிசியனாக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் சேதமதிப்பு சான்று நான் வழங்கியது தான். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு மேலசிவகாமியாபுரத்தில் ஒரு இடத்தில் பைக் வேலை செய்து கொடுத்ததற்காக போலீசார் கேட்டதால் சான்று வழங்கினேன். அந்த சேதமதிப்பு சான்று அ.சா.ஆ.2 ஆகும்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.2 ருடன் இருக்கும் பில் என்னால் வழங்கப்பட்டது இல்லை. அ.சா.2 ல் எழுதப்பட்டுள்ள விபரம் என்னால் எழுதப்படவில்லை. கையெழுத்து மட்டும் தான் என்னுடையது.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.25 15:37:31 +0530